மேம்படுத்தப்பட்ட வளர்ச்சி புதிய சமூக நெறியை நோக்கி

# முன்னோடி கிராமங்களை உருவாக்குவதில் சுயஉதவிக் குழுக்களின் பங்கு



ஒருங்கிணைப்பு

SBI FOUNDATION
Service Beyond Banking

Gram Seva
Empowering Rural Lives

DHAN Foundation

**மதுரை கூடலரங்கம் 2023**

தானம் அறக்கட்டளை, மதுரை

செப்டம்பர் 26, 2023



## பின்னனி

மதுரை கூடலரங்கம் 2023 சார்பாக தானம் பஞ்சாயத்து வளர்ச்சி அறக்கட்டளை மற்றும் எஸ்.பி.ஐ கிராம சேவாதிட்டம் இணைந்து பெருமையுடன் புதிய சமூக நெறியில் முன்னோடி கிராமங்களை உருவாக்குவதலில் பஞ்சாயத்து அளவில் சுயஉதவிக் குழுக்களின் பங்கு என்ற கருத்துப்பட்டறை ஏற்பாடு செய்துள்ளன. சுய உதவிக்குழுக்கள் சங்கம அமைப்புக்களின் மூலம் முன்னோடி கிராமத்தை உருவாக்குதல் மற்றும் அதனை நிறைவேற்றும் வழிமுறைகளை உருவாக்குதல் என்ற நோக்கங்களுடன் இந்த கருத்துப்பட்டறை உருவாக்கப்பட்டுள்ளது.

## முன்னோடி கிராமம்

முன்னோடி கிராமம் என்பது கிராமத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களையும் கிராம மேம்பாட்டிற்கான திட்டமிடுதலில் பங்கேற்க செய்து அதன்படி கிராமத்திட்டங்களின் செயல்பாட்டில் பஞ்சாயத்து மற்றும் மக்கள் நிறுவனங்களை ஈடுபடுத்தி, மக்களுக்கு தேவையான ஒட்டு மொத்த வளர்ச்சியினையும் அனைத்துக் கட்டமைப்புகளையும் நிலையாக கொண்டிருக்கும் கிராமமே முன்னோடிக் கிராமம்

## முன்னோடி கிராமங்களை உருவாக்குவதன் முக்கியத்துவம்

1. ஒட்டு மொத்த வளர்ச்சியினை முன்னோடி கிராமங்கள் பெற்றிருக்கும்
2. இக்கிராம மக்களின் வாழ்க்கை நிலை அனைத்து மட்டத்திலும் மேம்பாடு அடையும்
3. சுற்றுச் சூழலுடன் இயைந்த வாழ்க்கை நிலையை மக்கள் அடைவர்
4. மக்கள் பங்களிப்பு மற்றும் ஈடுபாட்டுடன் முன்னேற்ற திட்டங்கள் நடைமுறையில் இருக்கும்

## புதிய சமூக நெறி

வறுமையற்ற அறமும் சமத்துவமும் சார்ந்த சுற்றுசூழலைக் காக்கும் ஒரு சமூகத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது தானம் அறக்கட்டளையின் நோக்கமாகும். புதிய சமூக நெறிமுறைகளை ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே நிறுவனங்களின் தொலைநோக்கு பார்வை சாத்தியமாகும்.

1. தனிமனித நெறிமுறை: தனிமனித நெறிமுறைகளான உடல் உழைப்பு, நல்ல உணவு உட்கொள்ளுதல், என்றும் மனத் தெளிவுடன் வாழுதல், நல்ல பழக்கவழக்கங்கள், தொடர்ந்து கற்றக் கொள்ளும் மனப்பாங்கு போன்றவை தனிமனித வாழ்வின் சமூக நெறிகள் எனலாம்.

2. குடும்ப அளவில் நெறிமுறை: குடும்ப அளவில் நிதி தன்னிறைவு, நல்ல கலாச்சாரம், நல்ல உறவும் நட்பும் பேணுதல், ஆண் பெண் என்ற வேறுபாடு இல்லாமல் சமத்துவத்துடன் நடந்து கொள்ளுதல், குடும்பத்தில் அறவாழ்வு (உண்மை, அன்பு, நேர்மை), ஆடம்பரமின்மை போன்றவை குடும்பத்தின் புதிய நெறிமுறைகள் எனக் கூறலாம்.

3. நிறுவன அளவில் நெறிமுறை: சமூக நெறிக் கூறுகளானது உறுதியான நிறுவன அமைப்பில்தான் உள்ளது. மக்களாட்சித் தன்மையும், பரஸ்பர ஒருங்கிணைப்பும் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுதல், நிறுவனத்தின் நோக்கத்தில்; தெளிவுடன் இருப்பது மற்றும் நிர்வகிக்கும் தலைவர்கள் பணியாளர்கள் அதன் அடித்தளமாக விளங்கும்; உறுப்பினர்கள் தெளிவாக இருக்கும் பொழுது சமூகநெறி சிறப்பாக இருக்கும்.

சுயசார்புத்தன்மை: நிறுவனங்களின் உயிர்நாடி சுயசார்புத் தன்மையாக விளங்குதல் ஆகும்.

பன்முக சேவைகள்: ஒரு ஏழைக் குடும்பம் வறுமையில் இருந்து மீண்டு வருவதற்கு பலவிதமான சேவைகள் தேவை. அவற்றில் நிதி உதிவி, வாழ்வாதார உதவி, சுகாதாரம், கல்வி உதவி, வீடு கட்ட உதவி, காப்பீடு மற்றும் இடர்குறைப்பு உதவிகள் சரியான நேரத்தில் கிடைக்கும் பொழுது வறுமையில் இருந்து மீள்தல் சாத்தியமாகிறது.

வளங்களைப் பகிர்தல்: வறுமையை உணர்ந்து வறுமையில் இருந்து மீண்டவர்கள் அந்தப் பகுதியில் இருக்கும் ஏழைகளின் வளர்ச்சிக்காக தமது வளங்களை பகிர்தல் மிக உன்னதமான சமூகநெறி,

### இணைந்து பணியாற்றல்

நிறுவனங்கள அரசு துறைகளுடன் ஆக்கப்பூர்வமான இணைப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் அவற்றின் செயல்திறன் கூடும். அதிகப்படியான வளங்கள் நமது செயல்பாடுகளுக்கு கிடைக்கும்.

### நோக்கங்கள்

1. முன்னோடி கிராமங்களை உருவாக்குவதில் பல்வேறு உருத்தாளர்களை பங்குபெற செய்தல்.
2. பஞ்சாயத்தில் புதிய சமூக ஒழுங்கு மூலம் முன்னோடி கிராமங்களை உருவாக்கும் நடைமுறைகளில் தற்போதுள்ள முன்னெடுப்புக்களை புரிந்து கொள்ள.
3. புதிய சமூக ஒழுங்கு மூலம் முன்னோடி கிராமங்களை உருவாக்குவதன் கூறுகளை உருவாக்கி அதனைச் செயல்படுத்தும் முறைகளை அறிந்து கொள்ள.



## பங்கேற்பாளர்கள்

- தானம் எஸ்.பி.ஐ சேவா கிராமங்கள்
- தானம் எஸ்.பி.ஐ சேவா கிராம தலைவர்கள்
- விவசாயக் குழுக்கள் வயலகப் பணியாளர்கள் மற்றும்
- தானம் பணியாளர்கள்

## எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

1) முன்னோடித் திட்டங்களில் அதன் உறுத்தாளர்கள் உணர்வுப்பூர்வமாக ஈடுபட வழிவகை ஏற்படுத்தும்.

2) கிராம அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முன்னோடித் திட்டங்களை இனங்கண்டு, அதனை மேம்படுத்த வழிவகைளும் திட்டங்களும் மக்களால் முன்னேடுக்கப்படும்.

3) முன்னோடி கிராமங்களை உருவாக்க உறுதுணையாக உள்ள அரசுத் துறைகளை அங்கீகரித்து அவற்றிலிருந்து பஞ்சாயத்து மூலம் அடையவேண்டிய நன்மைகளை பற்றிய திட்டம் உருவாக வழிவகை ஏற்படும்.

4) முன்னோடி கிராமங்களை உருவாக்குவதற்கு தேவைப்படும் உதவிகளைப் பெற கொடையாளர்களை கண்டறியும் பணி துவங்கும்.

5) முன்னோடி கிராம உருவாக்கத்திற்கான ஒட்டுமொத்த திட்டங்களை மக்கள் பங்கேற்புடன் உருவாக்கி அதனை நடைமுறைபடுத்த நிலைத்த நீடித்த வளர்ச்சி இலக்கு வாரியாக திட்டங்கள் தீட்டப்படும்.

மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ளவும்

SBI FOUNDATION Service Beyond Banking — Gram Seva Empowering Rural Lives — DHAN Foundation

**N. சாந்தி மதுரேசன் / B. பிரகலாதன்**
**தானம் பஞ்சாயத்து வளர்ச்சி அறக்கட்டளை**
1ஏ, வைத்தியநாதபுரம் கிழக்கு, கென்னட் குறுக்குத் தெரு, மதுரை 625 016.
தொலைபேசி: +91 452 2302500 / 524.
கைபேசி: +91 97151 95099 / +91 95782 74957
மின்னஞ்சல்: dhandpdf@dhan.org, இணையதளம்: www.dhan.org

